# Social Status in Pudukavita

**Dr. B. Sangeetha**
*Assistant Professor of Tamil*
*Kongu Arts and Science College, (Autonomous) Erode*
*Affiliated Bharathiyar University*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346644

**Abstract**
*Literature is a reflection of human life. Literature is meant to express the changing social environment and the elements of misery. New poetry is said to be a new dawn the broke with traditional poetry. Today it is also an influential medium of the modern era. It carries the thoughts and ideas of the poet. New Poets write with the concern for the common good and when they write in support of and against the social environment, social Positions are beautifully conveyed. They also Criticize social norms. On this basis in the Poems induded in the poetry collection taken for study, the poet's have presented the activities taking place in society as a subject. In the Poems, social problems such as the level of education,Poverty, Superstition, and the Elam war have been examined in the activities*
***Keywords:*** *Social Problems, Such As The Level of Education, Poverty, Superstition, Elam War*

**References**

1. Tamil languages Dictionary p 52
2. N.Varadarajan Naidus & Umresolved Mercy Petitions p.1
3. Chennimalaib Dandapani & My home & p.75
4. William Chanels & mind in many p.78
5. Kulasekaran & Thousand generation p.18
6. Erode lord & Elam Road of Tears p.89
7. The emerald see has many owners p.64
8. Bharathiyar & bharathiyar poems p.38
9. Badumai, single headed eagle p.19
10. kavithasan, Nursery wind p.21
11. chennimalai Dandapani, My home p.40
12. Maragathamani,The emerald sea has mony owners p.44
13. Time freezes on the peaks, kanimozhi p.28
14. Maa. selvam, suryanna vaa p.39
15. The above, p.42
16. The above, p.43
17. Mukunda Nagaraj & Krishna nizhal p.64
18. Maa. selvam, suryanne vaa p.23
19. Manjaivanthan, Meaning less Hinduism p.109
20. Maa. selvam, suryanna vaa p p.52

# புதுக்கவிதையில் சமுதாய நிலை

***முனைவர் பா. சங்கீதா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்கு கலை அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) ஈரோடு
பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

***ஆய்வுச் சுருக்கம்***
*இலக்கியம் மனித வாழ்வின் பிரதிபலிப்பு. மாறிவரும் சமூகச் சூழலையும் அவலக் கூறுகளையும் வெளிப்படுத்துவதாக இலக்கியம் அமைகின்றது. புதுக்கவிதையானது மரபுக் கவிதையை உடைத்துக் கொண்டு முளைத்த புதுவிடியல் எனக் கூறப்படுகின்றது. இன்றைய நவீன யுகத்தின் செல்வாக்குப் பெற்ற ஊடகமாகவும் திகழ்கிறது. கவிஞனின் எண்ண ஓட்டங்களையும் சிந்தனைகளையும் தன்னுள் தாங்கிவெளி வருகிறது. புதுக்கவிதை எழுதுவோர் பொதுநலனின் அக்கறை கொண்டு தாங்கள் படைக்கும் படைப்புகளில் சமூகத்தின் சூழலை ஆதரித்தும் எதிர்த்தும் எழுதும் பொழுது சமூக நிலைப்பாடுகள் அழகாய் உணர்த்தப்படுகின்றன. சமூக நெறி பிறழின் அதனைத் தட்டிக் கேட்கவும் செய்கின்றனர். இதன் அடிப்படையில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட கவிதைத் தொகுப்புகளில் இடம் பெறும் கவிதைகளில் சமூகத்தில் நடக்கும் செயல்களைக் கவிஞர்கள் பாடுபொருளாகப் படைத்துக் காட்டியுள்ளனர். கவிதைகளில் கல்வியின் நிலை, வறுமை, மூடநம்பிக்கைகள், ஈழப் போர் போன்ற சமுதாயச் சிக்கல்கள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*
***திறவுச் சொற்கள்:*** *சமுதாயம், கல்வியின் நிலை, ஈழப்போர், வறுமை, போலிச் சாமியார்கள், மூடநம்பிக்கை*

**சமுதாயம்**

சமுதாயம் என்பதற்கு அகராதிகள் பல பொருள்களைக் கூறுகின்றன. சமுதாயம் என்ற சொல்லுக்கு, கூட்டம், சங்கம், பின்னணி, பொறு, போர் எனத் தமிழ் மொழி அகராதி பொருள் கூறுகிறது.

**கவிஞரும் சமுதாயமும்**

கவிஞன் சமுதாயத்தில் காணப்படும் நிறை குறைகளைத் தனது படைப்பில் எடுத்துக் காட்டி மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தித் தனது சமுதாய அக்கறையை வெளிக்காட்டுகிறான். “கவிஞன் தான் வாழும் சமூகத்தையும் அதில் உள்ள பல குழுக்களையும் பல்வேறு நோக்குகளில் பிரித்தும், இணைத்தும், பகுத்தும், தொகுத்தும் ஆராய்கின்றான். அப்போது உண்டாகும் உணர்ச்சிகளும், ஊடுருவிப் பார்ப்பதால் தோன்றும் எண்ணங்களும் செவ்விய மதுரம் சேர்த்தன. பொருளில் சீறிய தீச்சொல், வவ்விய சொற்களால் ஆன்ற பொருள், அறிவு, சால்பு, உறுதி, தெளிவு இவற்றோடு ஒளி பொருந்திய ஒழுக்கம் தரும் கவிதைகளால் வெளிப்படுகின்றன. அவ்வெளிப்பாடு அவன் காலத்திற்கும், அவன் கால மக்களுக்கும் மட்டுமல்லாமல் எதிர்காலச் சமுதாயத்திற்கும் மனிதகுலம் முழுமைக்கு உரியனவாகின்றன.என்பர். இதன் அடிப் படையில் கவிஞரையும், சமுதாயத்தையும் பிரிக்க இயலாது என்பதை அறியலாம்.

**கல்வியின் நிலை**

கல்வி என்பது ஒரு மனிதனுக்குச் சமுதாயத்தினையும் அச்சமுதாயத்தில் தன்னுடைய வாழ்க்கை நிலையினையும் வேண்டித் துருவி அறிந்து கொள்ள உதவும் எனலாம். சமுதாயத்தில் ஓர் அங்கமாக

உள்ள மனிதனின் வாழ்வில் கல்வி மிகவும் முக்கியமான ஒன்றாகும். அவ்வாறு வழங்கப்படும் கல்வியானது அறிவு சார்ந்த வளர்ச்சி முன்னேற்றம் மேம் பாடு உடையதாக இருக்கவேண்டும். சமுதாயத்தில் பிறரோடு ஒட்ட ஒழுகிச் சமூகமாக வாழ்ந்து விரும்பத்தக்க வழியில் சமுதாயத்தை மாற்றி அமைக்கும் திறனை இளைஞர்களிடையே வளர்ப்பதே கல்விப் பணியாகும். இத்தகைய கல்வியானது இன்றைய காலங்களில் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைத் தராமல் கசப்பைத் தருவதாக இருந்துவருகிறது என்பதைக் கவிஞர் சென்னிமலை தண்டபாணி 'என் வீட்டுத் திண்ணை' என்ற கவிதையில்,

**புத்தகச் சுமை**
**கல்விச் சுவையையே**
**கசப்பாகி விட்டது**

என்று கூறுகிறார். குழந்தைகளுக்குக் கல்வி இன்று அதிகப் படியாகத் திணிக்கப் படுவதால் கசப்பான நிலை உருவாகக் காரணமாகின்றது. மனித வாழ்வில் ஒருவரைத் திரும்ப நினைக்கத் தூண்டும் பருவம் குழந்தைப் பருவம். அந்தப் பருவத்தில் அனைத்தும் மகிழ்ச்சியாகவும் இனிமையாகவும் அமையும். ஆனால் இன்றைய கால கட்டத்தில் கல்வி குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைத் தாராமல் துன்பத்தைத் தருவதாக அமைந்து இருக்கின்றது எனலாம். சிறுவயதைச் சார்ந்த குழந்தைகளுக்குக் கூடத் தேவைக்கு அதிகமான கல்வி புகட்டப் பட்டு வருகின்றது. குழந்தைகள் புத்தகத்தைச் சுமந்து செல்லும் காட்சியினைக் கவிஞர் வில்லியம்ஸ்,

**குழந்தைகள் முதுகுப்பள்ளத்தாக்கில்**
**குட்டி பிரமிடுகள்**
**கூட்டமாய் முளைக்கின்றன**

என்கிறார். கல்வி சுமையாகும் போது குழந்தைகளின் மகிழ்வும் விளையாட்டும் முடக்கப் படுகின்றது. கல்வி என்பது மனிதனை மேம்படச் செய்யும் ஒரு கருவியாக விளங்குகிறது. அத்தகைய கல்வி இன்றைய சமுதாயத்தில் குழந்தைகளுக்குச் சுமையாக மாறியுள்ளது. வீட்டுப் பாடங்களிலிருந்து மீள முடியாமல் தந்தையைப் பரிதாபமாகக் காணும் சிறுவனின் மனநிலையைக் கவிஞர் குலசேகரன் 'ஆயிரம் தலைமுறைகளைத் தாண்டி' என்ற கவிதைத் தொகுப்பில்,

**"வீட்டுப் பாடங்களின் முன்**
**சிறுவன் ஒருகுற்றவாளியைப் போல**
**உமாலை வேலைகளில் உட்கார்ந்திருக்கிறான்**
**எண்களும் எழுத்துக்களும் நடுவில்**
**தனியாயிருக்கும் சிறுவன்**
**வெளியுலகத்திலிருந்து திரும்பி**
**தந்தை எட்டிப் பார்க்கிறான்"**

என்று கல்விச் சுமையால் குழந்தைகள் படும் வேதனையும், அவர்களைக் கண்டு மனம் வருந்தும் பெற்றோர் களின் நிலையையும் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. இதனையே "இந்தப் போட்டி உலகில் பாடத்திட்டம் நாளும் அதிகிரிக்கிறது. பள்ளிப் பைகளின் கணம் ஏறுகிறது. முதுகுகள் வளைகின்றன. இன்றைய காலங்களில் குழந்தைகளுக்குக் கல்வி திணிக்கப்படுவதைக் கேட்க முடியாமல் பெற்றோர்கள் விழி பிதுங்கி நிற்கின்றனர். இதனால் மாணவச் சமுதாயம் இளமைப் பருவத்திலே கல்வியைச் சுமையாகக் கருதும் நிலை உருவாகி விட்டது. இனி வரும் காலத்திலாவது குழந்தைகளுக்குக் கல்விச் சுமை குறைக்கப் படவேண்டும் என்பதைக் கவிஞர் கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

### ஈழப் போர்

பண்டைய காலத்திலிருந்து இன்றுவரை போர் நடைபெற்றுக் கொண்டு வருகிறது எனலாம். போரின் காரணமாக மனிதர்களின் உயிர் இழப்பு அதிகரித்து வருகிறது. 'இனத்துக்கும் இனத்துக்கும், சமூகத்துக்கும் சமூகத்துக்கும், நாட்டுக்கும் நாட்டுக்கும் போர் நடக்கிறது. தன்னால் முடிந்தவரை கையகப் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தவிப்பு மனிதனிடத்தில் இருக்கும்வரை போர்கள்

இருக்கும். இயற்கைச் செல்வங்கள் நிறைந்து விளங்கிய ஈழ மண் இன்று ஆயுதக் கிடங்காக மாறி எத்தனையோ மக்களின் உயிர்களைப் பறித்துவரும் நிலமாக மாறிவிட்ட பரிதாப நிலையினை,

**கண்ணீர்**
**நிலமே நிலமே**
**இது**
**எங்கள்**
**தாய் நிலம்**
**நிஜமே நிஜமே**

என்று கண்ணீரால் வாடும் ஈழ மக்களின் நிலையைக் கவிஞர் ஈரோடு இறைவன் விளக்குகிறார். ஈழப் போரின் காரணமாக மக்கள் எவ்வளவு பயங்கரமான கொடுமையை அனுபவித்து வாழ்கின்றனர் என்பதை,

**தகரத் தட்டில் பாதியாய்க் கிடக்கும்**
**உடல்கள்**
**இறந்த வாசனை**
**இயற்கை அள்ளித் தெளித்த**
**தெருக்கள் மனித உடல்கள் அடுக்கப்பட்ட**
**சீனப் பெருஞ்சுவராய் நவீன ஈழம்'**

என்று ஈழ மண்ணில் நடக்கும் கொடுமைகளைக் கவிஞர் மரகதமணி காட்சிப்படுத்தியுள்ளார். ஈழப் போரிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள மக்கள் வாழ்ந்த இடத்தை விட்டுவிட்டு வேறு இடத்திற்குச் செல்லும் நிலை ஏற்படுகிறது.

**வறுமை**

சாதி மதங்கள் நிறைந்த சமுதாயத்தில் வறுமை நிலை இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கிறது. நமது நாட்டில் விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறினாலும் மக்கள் சிலரின் வறுமை நிலை இன்னும் மாறவில்லை என்பதை,

**வயிற்றுக்குச் சோறிடவேண்டும் - இங்கு**
**வாழும் மனிதருக் கெல்லாம்**

என்ற வரிகளில் பாரதியார் புலப்படுத்துகிறார். மக்களுக்குத் தேவையான அடிப்படை பொருளாதார வசதிகள் இல்லாத நிலையே வறுமையாகும். நமது நாட்டில் மக்களை வலுப்படுத்தப் பல திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. ஆனாலும் வறுமையை அழிக்கமுடியாத நிலையே இருந்து வருகிறது. வறுமையின் காரணமாக உண்ண உணவு இல்லாமல் எத்தனையோ பெண்கள் குழந்தைகளை வைத்துக் கொண்டு பிச்சை யெடுத்து வரும் அவலத்தைக் கவிஞர் மாதுமை,

**பிறந்த பிஞ்சுகளுடன்**
**பிச்சை எடுக்கும்**
**சோகமும்**

என்ற வரிகளின் மூலமாக வறுமை நிலை கண்முன்னே காட்சிப் படுத்தியுள்ளார். இதே கருத்தினைக் கவிஞர் கவிதாசன் தனது 'நாற்றங்கால் காற்று'' என்ற கவிதையில்,

**தாயோடு சேயும்**
**வறுமைக் கையேந்தல்**

எனக் கூறியுள்ளார். இந்த உலகில் இயற்கையின் அழகுகள் எங்கும் நிறைந்து இருந்தாலும் கூட வறுமையின் காரணமாக ஏழைச் சிறுமிகள் தட்டேந்திப் பிச்சை எடுக்கும் நிலை சமுதாயத்தில் இல்லாமல் இருந்தால் தான் உண்மையான இயற்கை அழகு என்பதை,

**அய்யா பிச்சை என்றபடி - ஓர்**
**அழகுச் சிறுமி தட்டேந்தி**
**வெய்யில் கொளுத்தும் சாலையிலே**
**பொருள்**
**வேண்டி நின்ற கொடுமையினைக்**
**கண்டு மனதில் கொப்பளித்தேன்**
**மண்ணில் இந்தத் துயரக்காட்சி**
**இனி மடிந்தால் அதுதான் பேரழகு**

என்று இயற்கை அழகுகள் இல்லாவிட்டாலும் கூடப் பரவாயில்லை ஏழ்மையின் கொடுமைகள் இல்லாமல் இருப்பதே பேரழகைவிடப் பெரும் பேரழகு என்று கூறியுள்ளார் கவிஞர் சென்னிமலை தண்டபாணி. மக்கள் வறுமையின் காரணமாகக் குப்பைப் பொருளை உணவாக உட்கொண்டு மற்றவர்களிடம் யாசித்து வாங்கும்

சில்லறை காசுகளை வைத்தும் வாழ்க்கை நடத்திவரும் பரிதாப நிலையினைக் கவிஞர் மரகதமணி,

***பாத்திராத முக அடையாளம்***
***வதங்கிய குப்பை***
***உணவுகளே விருந்தாய்***
***சில பல என***
***ஐந்தாறு சில்லறைகள்***
***எதையும் காண இவர்கள்***
***ஆசைப்படுவதில்லை***
***தட்டில் விழும்***
***சில சில்லறைகளைத் தவிர***

என்று வறுமையின் சோக நிலை விளக்கப் பட்டுள்ளது. இன்றைய காலத்தில் வசதி படைத்தவர்கள் நவீனப் பொருள்களைப் பயன்படுத்தி வாழ்கிறார்கள். ஆனால் ஏழை மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற்றம் அடையாமல் இருந்து வரும் போக்கினைக் கவிஞர் கனிமொழி, இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

***நமது நவீன வாகன***
***சக்கரங்கள் போக***
***முடியாத தெருக்கள்***

என்கிறார். நமது சமுதாயம் வறுமைச் சூழலில் இருந்துவரும் நிலையினைக் கவிஞர்கள் மிக உருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

### போலிச் சாமியார்கள்

அரசியல் பிரச்சினைகளைப் பின் தொடர்ந்து சமுதாயத்தில் ஆன்மிகத்தைப் பரப்புவது போல மக்களை ஏமாற்றி வாழும் போலிச் சாமியார் களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இவர்கள் உண்மையான பக்தி இல்லாமல் போலித்தனமாக வழிபாடுகளைச் செய்துகொண்டும் காவி உடைகளை அணிந்து கொண்டும் மக்களின் பணத்தை வீணடிக்கும் நிலையினைக் கவிஞர் மா.செல்வம்,

***காவியுடை அணிந்து***
***கல்லைக் கனியென்று***
***காசாக்கும் பாவியே!***
***கூசாப் பொய்யனே***

என்ற கவிதை வரிகளில் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். போலிச் சாமியார்கள் கடவுளுக்குப் பணி செய்யும் அடியார்களைப் போல ஆன்மிக வேடத்தைப் போட்டுக் கொண்டு தகாத செயல்களைச் செய்து அதிபதியாக வாழும் அவலநிலையை,

***திருநீறு மந்திரம் செய்யலாம்***
***லிங்கம் வரவழைக்கலாம்***
***ஆசிர்வதிக்கலாம்***
***ஆதீன ஆஸ்திக்கு அதிபதியாகி***
***அகிலம் ஆளலாம்***

என்று போலித்தனமான வாழ்க்கை நிலையினைக் கவிஞர் மா.செல்வம் சுட்டிக் காட்டியுள்ளார்.

போலிச் சாமியார்களைப் பற்றிய உண்மையை அறியாத அப்பாவி மக்கள் அவர்களின் கருத்துக்களை நம்பிக் கொண்டு பூசைகளைச் செய்து தங்களுடைய உடைமைகளை இழந்து ஏமாந்து நிற்கும் பரிதாப நிலையினை,

***ஏமாற்றுவது வாழ்க்கையாகி விட்டது***
***ஏமாறுவதும் வாழ்க்கையாகி விட்டது ..***

என்று ஏமாறும் மக்களின் நிலை கூறப் பட்டுள்ளது. இவ்வாறாகப் போலிச் சாமியார்கள் சமுதாயத்தில் களங்கமாக இருக்கிறார்கள். இவர்களால் சமயத்தின் புனிதத் தன்மை கெட்டு விடுகிறது என்பதை உணர்ந்த கவிஞர்கள் மக்களுக்கு விழிப்புணர்வைத் தரும்படியாகக் கவிதைகள் அமைத்துள்ளனர் எனலாம்.

### மூடநம்பிக்கை

வறுமையான சூழலிலும் மூட நம்பிக்கையுடனும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். பெரியார் போன்ற சீர்த் திருத்தவாதிகள் வாழ்ந்த மண்ணில் மக்கள் மூடநம்பிக்கையோடு வாழ்கிறார்கள். மூடநம்பிக்கையை நம்பி வாழும் மனிதர்களின் அறியாமையைக் கவிஞர் முகுந்த் நாகராஜன் அவர்கள் ‘அழைக்காதே’ என்ற கவிதையில்,

**"கீழ்வீட்டு குழந்தையின் கையில்**
**புது தாயத்து மின்னியது**
**என்ன விஷயம்? என்று கேட்டேன்**
**அவள் அப்பாவிடம்**
**ஊரில் இருந்த**
**அவர் மனைவியின் தங்கை**
**காமாலையில் இறந்துபோய் விட்டாளாம்**
**அவளுக்கு இந்த குழந்தைமேல்**
**ரொம்ப பிரியமாம்"**

என்ற கவிதை வரிகள் மூடநம் பிக்கையைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது. இறந்து போன சித்திக்குக் குழந்தையின் மேல் பிரியம் அதிகம் என்பதால் குழந்தைக்குப் பாதிப்பு ஏற்படும் எனப் பயந்து குழந்தைக்குத் தாயத்துக் கட்டி இருக்கிறார்கள், இறப்பு என்பது அவரவர் விதியின்படி வருவது அதற்குப் பயந்து மூடநம் பிக்கையோடு தாயத்து கட்டி வாழும் மனிதர்களின் மூடத்தனத்தைக் காண முடிகிறது.

மனிதர்கள் சிலர் விலங்குகள் செய்யும் இயல்பான செயலைக்கூடச் சகுனமாகக் கருதுவார்கள். ஒரு செயலைத் தொடங்கும் போது பூனை குறுக்கே போனால் அதை அபசகுனமாக எண்ணுவார்கள். இந்த அவலநிலை நவீனக் காலத்திலும் மக்கள் கடைபிடிக்கின்றனர் என்பதை,

**பூனையே**
**குறுக்கே போகாதே!**
**ஊளையிடாதே!**
**பல்லியே**
**இடம் வலம்**
**இச்சுக் கொட்டாதே**
**ஆந்தையே**
**அலறாதே**
**இவை சகுனங்களாம்**

என்கிறார் கவிஞர் மா.செல்வம். பல்லி பற்றிய மூடநம்பிக்கை கருத்தை மஞ்சை வசந்தன் 'அர்த்தமற்ற இந்து மதம்' என்ற நூலில், பல்லி கத்துவதைக் கொண்டு நல்லது நடக்கும் அல்லது கெட்டது நடக்கும் என்று தீர்மானிக்கும் பழக்கம் இந்துக்களிடம் உள்ளது. வீட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கத்தினால் அது நல்லது என்றும் வேறோர் இடத்தில் சொன்னால் கெடுதல் வருவதைக் குறிக்கிறது என்கிறார். இவ்வாறு மூடநம்பிக்கையைக் பின் பற்றிக் கண்மூடித்தனமான அர்த்தங்களைக் கற்பித்துக் கொண்டு அறியாமையில் மூழ்கியிருக்கும் மக்களிடம் கவிஞர் மா. செல்வம்,

**நாம்**
**பழமைதனிலே**
**புதைவோம்**
**களையெடுக்கும்**
**வாழ்வதெற்கு**
**பதுங்கு குழியில்**
**பதுங்கி கொள்வோம்**

என்று அறியாமையிலிருந்து விடுபட வேண்டியதின் அவசியத்தை எடுத்துக் கூறியுள்ளார். இனியேனும் மக்கள் சமுதாயத்தில் மூடநம்பிக்கையை நம்பி வாழாமல் தெளிவான சிந்தனை பெற்று விழிப்புணர்வுடன் வாழும் நிலை உருவாக வேண்டும் என்பது கவிஞர்களின் கனவாகும்.

## முடிவுரை

இன்றைய தமிழ் இலக்கியத்தில் வளர்ந்து வருகின்ற உயிரோட்டம் உள்ள வடிவமாக கவிதை வடிவம் விளங்குகின்றது மக்களுக்கும் சமுதாயத்திற்கும் நன்மையை எடுத்துக் காட்டி சமுதாய உணர்வோடு புதுக்கவிதை நடை போடுவது போற்றுதற்குரியதாக உள்ளது. காலத்திற்கு ஏற்ற கருத்துக்களை மக்களின் மனதில் விதைக்கின்ற பணியை கவிதைகள் செவனே செய்கின்றது அதன் அடிப்படையில் புதுக் கவிதைகளில் சமுதாய நிலை எவ்வாறு உள்ளது என்பதை அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கல்விச் சுமையால் பள்ளிக்குச்செல்லும் குழந்தைகள் மகிழ்ச்சியை இழந்து அவர்களின் மனநிலை எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை

தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஈழப் போரின் கொடுமைகளையும் அதனால் பாதிக்கப்படும் மக்களின்உள்ளத்துஉணர்வுகளையும்கவிஞர்கள் மிக உருக்கமாக பதிவு செய்துள்ளனர். மூடநம்பிக்கையால் வாழ்க்கையை முடக்கி வாழும் மக்களின் விலைகளை திறக்கும் படியாக கவிதைகள் அமைந்துள்ளது. போலி சாமியார்களின் முகத்திரைகளை அகற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்றும்படியாக கவிதைகள் படைக்கப் பட்டுள்ளது.

## அடிக்குறிப்பு

1. தமிழ் மொழி அகராதி ப.582
2. நா.வரதராஜன்நாயுடு,கவனிக்கப்படாத கருணை மனுக்கள் ப.1
3. சென்னிமலை தண்டபாணி, என் வீட்டுத் திண்ணை ப.75
4. வில்லியம், சனல் மனம், பல.78
5. குலசேகரன், ஆயிரம் தலைமுறை பல.18
6. ஈரோடு இறைவன், ஈழத்தில் கண்ணீர் சாலை ப.69
7. மரகதமணி, கடலுக்குச் சொந்தக்காரி பல.64
8. பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.308
9. மாதுமை, ஒற்றைச் சிலம்பு பல.19
10. கவிதாசன், நாற்றங்கால் காற்று ப.21
11. சென்னிமலை தண்டபாணி என் வீட்டு திண்ணை பல.40
12. மரகதமணி ,கடலுக்குச் சொந்தக்காரி பல.44
13. கனிமொழி, சிகரங்களில் உறைகிறது காலம் ப.28
14. மா. செல்வம் சூரியனே வா ப.39
15. மேலது ப.42
16. மேலது ப.43
17. முகுந்து நாகராஜ் கிருஷ்ண நிழல் ப.64
18. மா செல்வம் சூரியனே வா ப.23
19. மஞ்சைவந்தன், அர்த்தமற்ற இந்து மதம்ப.109
20. மா செல்வம் சூரியனே வா ப. 52